Unit Komunikasi Korporat

KERATAN AKHBAR

| | | |
|---|---|---|
| SURAT KHABAR | : | MALAYSIAN NANBAN |
| TARIKH | : | 22/8/2019 MUKA SURAT : 3 |
| JABATAN | : | KATS / YBM / JPSM / BBP |
| KLASIFIKASI | : | **PERHATIAN** |


# மலேசியா

## வனப் பாதுகாப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு



அண்மையக் காலமாக, பல மேம்பாட்டுப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் நாட்டில் நிலங்களைக் காட்டிலும் காடுகளே அதிகமாக இருக்கின்றன.

இந்நிலையில், நாட்டின் உயிரியல் உருமாற்றத்தைத் தொடர்ந்து பேணிக் காத்து வருவதில், அரசாங்கம் உறுதியாக இருப்பதாக, நீர், நிலம், இயற்கை வளத்துறை அமைச்சர் டாக்டர் சேவியர் ஜெயகுமார் தெரிவித்திருக்கிறார்.

தற்போது, நாட்டின் 55.3 விழுக்காடு அதாவது ஒரு கோடியே 82லட்சத்து 80 ஆயிரம் ஹெக்டர் நிலம் காடுகளினால் சூழ்ந்திருப்பதாக டாக்டர் சேவியர் ஜெயகுமார் தெரிவித்தார்.

இது, நாட்டின் 50 விழுக்காட்டுப் பகுதியை உயிரியல் வளமாக உருவாக்குவதாக, கடந்த 1992-ஆம் ஆண்டில் பிரேசில், ரியோவில் நடைபெற்ற புவியியல் மாநாட்டில், துன் டாக்டர் மகாதீர் முகமட் எடுத்துக் கொண்ட உறுதிமொழிக்கும் அதிகமானதாகும் என்று அவர் குறிப்பிட்டார்.





நாட்டில் இருக்கும் உலகின் பழமை வாய்ந்த தாவர வகைகளும் வனவிலங்குகளும் அழியாமல் இருப்பதை உறுதி செய்யும் மேம்பாட்டுத் திட்டங்களே மேற்கொள்ளப்படும் என்று டாக்டர் சேவியர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

மலேசியா, செம்பனைத் தொடர்பில் அதிகமான காடுகளை அழிப்பதாக, வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்களை டாக்டர் சேவியர் சாடியிருக்கிறார்.

தவறான வழிகாட்டுதலின் அடிப்படையில் இப்பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றஞ் சாட்டிய டாக்டர் சேவியர், காடுகளுக்கும் வனவிலங்குகளின் வாழ்விடங்களுக்கும் பாதகம் ஏற்படாத வகையில், நாட்டின் செம்பனைத் தொழில்துறை துரிதமாக வளர்ச்சியடைந்திருப்பதாக தெரிவித்தார்.



நிலக்கரி, நிரந்தர வனப் பாதுகாப்பின் கீழ் இருக்கும் காடுகள் ஆகியவற்றை செம்பனை பயிரிடப்படக் கூடாத பகுதிகளாக அரசாங்கம் அறிவித்திருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இது, பயிரிடக்கூடிய நிலத்தை விரிவாக்கம் செய்வதற்கு பதிலாக விளைச்சலை அதிகரிப்பதற்கான முயற்சியாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளையில், 2020ஆம் ஆண்டு வாக்கில், நாட்டின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், முறையான காடுகள் நிர்வகிப்பு மற்றும் உயிரியல் உருமாற்றம் தொடர்பிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட விருப்பதாக டாக்டர் சேவியர் குறிப்பிட்டார்.

தற்போது, நாட்டின் காடுகளில் 13.2 விழுக்காடு பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக இருக்கின்றன.

இது, 2025ஆம் ஆண்டு வாக்கில் 20 விழுக்காடாக உயர்வு காணவிருப்பது உயிரியல் உருமாற்றத்தின் அடிப்படையிலான தேசியக் கொள்கை இலக்காகும்.

அதனைத் தவிர்த்து, இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள், 10 கோடி மரங்களை நடுவதற்கு அரசாங்கம் எண்ணம் கொண்டிருப்பதாக அவர் கூறினார்.

காடுகளை பராமரிக்கும் அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, நமது காடு என்ற கண்காட்சியை தமது அமைச்சு ஏற்பாடு செய்திருப்பதாக டாக்டர் சேவியர் தெரிவித்தார்.

இக்கண்காட்சி ஆகஸ்ட் 24ஆம் தேதி சனிக்கிழமை தொடங்கி ஒரு மாதத்திற்கு கோலாலம்பூர் கோபுரத்தில் நடைபெறும் என்று அவர் கூறினார்.

இலவசமாக நடத்தப்படும் இக்கண்காட்சியை பிரதமர் துன் டாக்டர் மகாதீர் முகமட், வரும் வெள்ளிக்கிழமை அதிகாரப்பூர்வமாக திறந்து வைக்கவிருக்கின்றார்.

நிலையான மேம்பாடு: மலேசியாவில் குறைந்தது 50 விழுக்காட்டு நிலம் தொடர்ந்து காடுகளாக இருக்கும் என்று டாக்டர் ஜெயக்குமார் நம்புகின்றார்.

உயிரியல் உருமாற்று வளம்: நமது மழைக் காடுகள் உலகின் பழைமையான காடுகளில் ஒன்றாகும்

**- தீபகற்ப மலேசிய வன இலாகாவுக்கு நன்றி.....**